பரி. பவுல்

# அஹமதி தமிழ் திருச்சபை

## "உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்."

சங்கீதம் 128:2

## செய்திமலர்

பிப்ரவரி 2026

இதழ் : 09

மலர் : 27

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நன்மையும் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. புதிய ஆண்டின் முதல் மாதத்தை கடந்துவர கர்த்தர் பாராட்டின தயவுக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் (கேம்ப் ஊழியம்) யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். எல்லா ஆராதனைகளிலும் ஜெபக்கூடுகைகளிலும் சபையின் குடும்பங்கள் எல்லோரும் கலந்து கொள்ளவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேவனுக்கு பிரியமானவர்களே! இந்த மாதமானது நம்முடைய **கர்த்தரால் நம் கையின் பிரயாசங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுகின்ற** மாதமாக இருக்கும். யார் யாரெல்லாம் எதிர்காலத்தை குறித்து கலக்கமுற்று பயந்து நடுங்கி சோர்ந்து நிற்கிறீர்களோ... அது வறுமையினால் உண்டாகிற கலக்கமாக இருக்கலாம்: தேவைகள் அதிகமான சூழலாய் இருக்கலாம்: குறைந்த வருமானம், அதிகமான செலவாக இருக்கலாம்: அதனால் கடன் பிரச்சனை பெரிதாக இருக்கலாம்: ஒருவேளை குறைந்த வருமானமாக . இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மோடு கர்த்தர் எப்பொழுதும் இருக்கிறார் என்பதை நாம் ஒரு நாளும் மறந்து விடக்கூடாது.

**“எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும் ஆம்; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்” (சங். 90:17)** என்று மோசே ஜெபிக்கிறதை நாம் நம் வேதத்தில் காண்கிறோம். நம் கையின் பிரயாசத்தில் காணப்படும் எந்த தடையாக இருந்தாலும் மோசேயின் ஜெபத்தைப்போல நாமும் விசுவாசத்தோடு தேவனை நோக்கி ஜெபிக்கின்ற போது நம் கையின் கிரியைகளை உறுதிப்படுத்தி ஆசீர்வதித்து நம்மை உயர்த்த நம் தேவன் வல்லமையும் சகல அதிகாரமும் உள்ள தேவனாய் இருக்கிறார்.

நம் கையின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படவும் கர்த்தர் நம்மை உயர்த்தவும் நம்மிடம் காணப்பட வேண்டிய தகுதி **“கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்” (சங். 128:1)** என்று சங்கீதக்காரன் நமக்கு போதிக்கிரதை நாம் கைக்கொள்ள வேண்டும். நாம் எப்பொழுது கர்த்தருக்கு பயந்து அவரின் வழிகளை அவரின் அடிச்சுவடை பின்பற்றி செயல்படுகின்றோமோ அப்பொழுதே நம் தேவன் மேற்சொன்ன வசனத்தின் தொடர்ச்சியைப் போல **“உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்” (சங். 128:2)** எனற வேதவசனத்தின்படி கர்த்தர் நம் கையின் பிரயாசங்களை ஆசீர்வதித்து அதில் நமக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாகச் செய்ய நம் தேவன் சகல அதிகாரமும் உள்ளவர் என்பதை சிந்தையில் வைத்து கர்த்தரின் வழியில் வாழ்வோம். கர்த்தரால் நமக்கு எப்பொழுதும் ஜெயம் உண்டாகும். கர்த்தர் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக. நம்மேல் கிருபையுள்ள தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்
சகோ. ஆரோக்கியதாஸ். P

## தேவ செய்தி

ஆண்டவர் அன்றைக்கு ஊழியம் செய்யும் போது, எல்லாரும் கேட்கும்படியாக வாசித்த மிக முக்கியமான பகுதி .

லூாக்கா 4 : 18 – 19 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், பிரசித்தப்படுத்துவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் (இயேசு) கண்டு – ஜனங்கள் கேட்கும்படியாக இயேசு சொல்கிறார். நான் வந்திருப்பதின் நோக்கம் புறக்கணிக்கப்பட்டவர்களுக்காக, தரித்திரருக்காக, சாத்தானாலே அடிமைத்தனத்திற்குட்பட்ட ஜனக் கூட்டத்தை அவர்களின் சிறையிருப்பை விடுவிக்கும்படியாகவும், அவர்களுக்கு நம்பிக்கை தரும்படியாகவும், நான் இந்த பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஒருவேளை உங்களுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட அநுபவங்களின் வழியாக நீங்கள் கடந்து போய்க் கொண்டு இருப்பீர்கள் என்றால். இன்றைக்கு இந்த வசனப் பகுதியிலிருந்து நம்பிக்கை உண்டு சகோதர சகோதரிகளே. ஒருவேளை நீங்கள் மறக்கப்பட்டு இருக்கலாம், ஒரு வேளை புறக்கணிக்கப்பட்டு இருக்கலாம், உங்களை நோக்கி தேவ வார்த்தை வருகிறது.

உனக்காக தேவ குமாரன் மனிதனாக இந்த மண்ணுலகிற்கு வந்து, உன்னை சாத்தானின் அந்தகார கிரியைகளிலிருந்து விடுவிக்கும்படியாக இயேசு இந்த பூமிக்கு அனுப்பப்பட்டார். உனக்கும் இருக்கும் நம்பிக்கை இயேசு வந்ததால் ஜீவன் உண்டு. இயேசு வந்ததால் நம்பிக்கை உண்டு, இயேசு வந்ததால் அடிமைத்தனத்திற்குட்பட்டு வாழ வேண்டிய அவசியமில்லை, இயேசு வந்ததால் புரக்கணிக்கப்பட்ட எண்ணத்தோடு வாழ வேண்டிய அவசியமில்லை, இயேசு வந்ததால் தெரிந்து கொள்ளப்பட்டேன், இயேசு வந்ததால் ஆண்டவரின் ராஜ்ஜியத்தில் ஒரு நபராக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறேன், இயேச வந்ததால் தேவ குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக ஆகும்படியான சிலாக்கியத்தை தேவன் எனக்கு தந்திருக்கிறார்.

அன்றைக்கு எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டு அற்பமாக எண்ணப்பட்ட மேய்ப்பர்களை தெரிந்து கொண்டு, அவர்களுக்கு பரலோகத்தின் சேனையை அனுப்பி நற்செய்தி அறிவிக்கும் சிலாக்கியத்தை கொடுத்திருக்கிறார் என்றால். இன்றைக்கு உங்களையும் என்னையும் மறக்காமல் நமக்கு புது நம்பிக்கை உண்டாக்கும்படிக்கு, தமது ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி நம்மை சேற்றிலிருந்து தூக்கி, பள்ளத்திலிருந்து தூக்கி, நம்பிக்கை இல்லாத இடத்திலிருந்து தூக்கி, நம்பிக்கை உண்டாகும்படியாக இயேசு இந்த பூமிக்கு வந்தார். இந்த தேவன் நமக்கு, நம்மோடு கூட இருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ்வோம். அல்லேலூயா தேவனுக்கே மகிமை!

கர்த்தர் கிருபையில்

சகோ. தாமஸ்

## சகோதரிகள் பகுதி

கர்த்தரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன்.

எபேசியர் 1:16-19 பவுல் சபைக்காக ஜெபிக்கிறார். எதை மனதில் வைத்து ஜெபித்தார். எதற்காக ஜெபித்தார். அதே போல நாமும் ஜெபிக்க வேண்டும் என்று ஆவியானவர் எதிர்பார்க்கிறார். எபேசியர் (1 : 16-19) ஜெபம் என்றவுடன் சிலர் மனதில் பட்டதை எல்லாம் ஜெபிக்கிறார்கள். தேவைகளுக்காக ஜெபிப்பது, பிரச்சனைகளுக்காக ஜெபிப்பது, ஒரு தீர்வுக்காக ஜெபிப்பது. பவுலிற்கு நம்மைகாட்டிலும் அதிகமான பிரச்சனைகள் போராட்டங்கள் இருந்தது. ஆனால் பவுல் அதற்காக எல்லாம் ஜெபிக்கவில்லை. பிரதானமாக ஜெபித்தது என்னவென்றால் எபேசியர் 1 அதிகாரம் 16-19 வரையுள்ள வசனத்தில் ஜெபிக்கிறார்.

பவுலின் ஜெபத்திற்கும், இயேசுகிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவரும் ஜெபித்து இருக்கிறார். இயேசு கிறிஸ்துவினுடைய ஜெபம் பிதாவை அறிமுகப்படுத்துகிறார்.

புதுவிதமாக ஜெபிக்கிறார். பிதாவை என் பிதா என்று அழைக்கச் சொல்லுகிறார். ஆனால் அங்கு ஜெபிக்கிற ஜெபத்தில் இயேசு கிறிஸ்து இன்னும் மறிக்கவில்லை இன்னும் இரத்தம் சிந்தப்படவில்லை. ஆவியானவர் சேர்க்கப்படவில்லை. அந்த ஜெபம் புது உடன்படிக்கையின் ஆரம்பம்தான்.

பவுல் ஜெபிக்கும் போது அவர் ஒரு காரியத்தை மனதில் வைக்கிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவையின் மூலமாய் நமக்கு என்ன நடந்தது என்று நாம் அறிய வேண்டும். அதனால் தான் விசுவாசிகளாகிய நமக்கு மிகவும் அவசியமாய் காணப்படுகிறது.

பவுலின் ஜெபத்தில் பல வெளிப்பாடுகள் உண்டாகிறது, நன்மை இருக்கிறது, இரத்தம் சிந்தப்பட்டு இருக்கிறது. இயேசு கிறிஸ்து மரித்து இருக்கிறார். அவர் நாமம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆவியானவர் ஊற்றப்பட்டு இருக்கிறார். இவ்வளவு காரியங்கள் இருக்கிறது. அதனால் தான் நாம் இந்த ஜெபத்தை ஆழமாக தியானிக்க வேண்டும்.

எபேசியர் 1:16-19 இந்த ஜெபத்தில் 5 காரியங்களுக்காக அப்போ. பவுல் ஜெபிக்கிறார்.

## 1) தேவனை அறிந்து கொள்ள வேண்டும்.

தேவனை அறிந்து கொள்வதற்கான, ஞானம், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டும் என்று ஜெபிக்கிறார். தேவன் யார் என்று அறிந்து ஜெபித்தால்தான் அந்த ஜெபம் வல்லமையுள்ளதாக காணப்படும். தேவன் எப்படிப்பட்டவரென்றே தெரியவில்லை என்றால் நீங்கள் ஜெபிக்கும் போது யாரிடமோ ஜெபிப்பது போல் இருக்கும்.

a. சிருஷ்டிப்பின் தேவனாக

b. ஒழுங்கின்மையை மாற்றுகிறவராக

c. வெறுமையை மாற்றுகிறவராக

d. இருளை மாற்றுகிறவராக இருக்கிறார்

e. வார்த்தையால் உலகத்தை உருவாக்கினார்

எல்லாவற்றையும் அவர் வார்த்தையால் உண்டாக்கினார்.

நமக்காகவே இவை எல்லாம் உண்டாக்கினார். நம்மை இரட்சிசப்பதற்கு முன்பாகவும் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தி வைத்து இருக்கிறார். ஒரு நாளும் கைவிடமாட்டார். இந்த தேவனை யாராலும் மாற்ற முடியாது. தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். ஜெபித்து அவர் மனதை உருக பண்ணவேண்டும் என்று நினைக்கக் கூடாது. நாம் ஜெபித்தால் தான் அற்புதம் செய்வார் என்று நினைக்கிறார்கள். அவர் ஏற்கனவே எல்லாவற்றையும் செய்து வைத்து இருக்கிறார். அதனால்தான் நம்மால் ஜெபிக்கவே தூண்டுகிறார், ஜெபிக்கிறோம். நாம் ஜெபித்த பிறகு எல்லாவற்றையும் அவர் ஆயத்தம் செய்யவில்லை. எபேசியர் 1:3 ல் வாசிக்கிறோம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

## 2) அவர் நம்மை அழைத்ததின் நம்பிக்கை:

அவர் நம்மை அழைத்ததினாலே உங்களுக்கு என்ன நம்பிக்கை உண்டாயிருக்கிறது. What is a Faith? நம்பிக்கையின் மேன்மை இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும்.

## 3) மகிமையின் ஐசுவரியம்:

பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும்.

## 4) வல்லமை:

இயேசு கிறிஸ்துவினிடத்தில் வெளிப்பட்ட அதே வல்லமை விசுவாச பிள்ளைகளிடத்தில் வெளிப்பட வேண்டும். இந்த நான்கையும் புரிந்துகொள்ள பிரகாசமுள்ள மனக்கண்கள் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன் என்று பவுல் ஜெபிக்கிறார்.

எபேசியர் 2 : 12 அக்காலத்திலே கிறிஸ்துவை சேராதவர்களும் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கை இல்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமா இருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். எங்கிருந்து நம்மை அழைக்கிறார் என்று சொன்னால் நாம் பாவிகளாய் இருக்கையில் நம்மை அழைத்தார். அழைத்த அழைப்பு கிறிஸ்துவையும் உங்களையும் ஒன்றாக மாற்றிவிட்டது.

அவர் தலையாய் இருக்கிறார். நாம் சரீரமாக இருக்கிறோம். அழைப்பு ஒரு நம்பிக்கையை கொடுக்கிறது. எதற்க்கு அழைத்தார். கிறிஸ்துவை உடையவர்களாய் மாற்ற கிறிஸ்துவின் சரீரங்களில் அவயங்களாய் மாற்ற நம்மை அழைத்து இருக்கிறார்.

தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
சகோதரி.டெய்சி எபிநேசர்

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் பிராங்ளின் அவர்களிடத்திலும்,**
**இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. தாஸ் கருணா அவர்களிடத்திலும்,**
**போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. கிரண் அவர்களிடத்திலும்,**
**ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று சகோ. சாம் ஆனந் அவர்களிடத்திலும்,**

**தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)**

# தேவனால் நடப்பட்ட நாற்றுகள்

நெகேமியா 12:36-ல் தான் தாவீதை, தேவனுடைய மனுஷனாகிய தாவீது என்று கூறப்பட்டுள்ளது. தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன், தனக்கு தோன்றியபடியெல்லாம் ஜெபிக்கிறவன், ' நீர் ஏன் தூரமாய் நிற்கிறீர், என் ஜெபத்திற்கு செவிசாயும், கவனித்து கேளும், என்று தேவனிடம் நேரே பேசுகிறவன் நேரிடையாக கேட்கிறவன் தாவீது. அதனால் தான் அவன் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன். இந்த தாவீது என்ற மனுஷனை தேவன் தேடி அவனை ராஜாவாக மாற்றி தன் ஜனத்தை மேய்பதற்கு நல்ல மேய்ப்பனாக உருவாக்கினார்.

1 சாமுவேல் 13:14ல் கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனை தமக்கு தேடி (God sought a man) அவனைத் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாய் இருக்கும்படி கட்டளையிட்டார் (He made him a captain). சங்கீதம் 78:70-71) ல் தம்முடைய தாசனாகிய (servent) தாவீதை தெரிந்து கொண்டு ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார்... அவனை தம்முடைய ஜனமாகிய, சுதந்தரமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்கு அழைத்து கொண்டு வந்தார் (He made him a Shepherd)

தேவன் ஒருவனை தமக்கென்று தெரிந்து கொண்டாரானால் அவனை சரியாக உருவாக்குவார்.
ஏசாயா 43:1 யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர்.... என்று வேதம் கூறுகிறது. யாக்கோபு தான் இஸ்ரவேல், யாக்கோபு எத்தனாய் இருந்தான். அவனை கர்த்தருடைய ஊழியக்காரனாக உருவாக்கினாார்.

அது போல தேவனுடைய மனுஷர்களாகிய நம்மை இந்த உலகத்தில் வைத்து உலக ஜனங்கள் மத்தியில் தேவனுடைய மனுஷர்களாய் நாம் விளங்கும்படியாய் படிப்படியாய் நம்மை உருவாக்குகிறார். நாமெல்லாம் பரமபிதாவினால் நடப்பட்ட நாற்றுகள். நம்மை யாராலும் வேரோடு பிடிங்கி எறிய முடியாது.

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி -12:2 )

செல்வி.ஜியோபி ஷம்மா
சுகோ.வர்க்கீஸ்/ஜெஸ்லட்
சகோ.கண்ணன்
சகோதரி.ராணி ராமமூர்த்தி
சகோதரி. எலிசபத் ஈஸ்டர் ராஜ்
சகோ.எபினேசர்.V
செல்வி.யாழினி ஜெகன்நாதன்
செல்வி.மகிழினி ஜெகன்நாதன்
செல்வி. ஷாரோன் கிரேஸ்
சகோ.வேலு ராமர்
சகோதரி.கீதா சகாய மேரி
செல்வி. ஜெஷின் ஷாரா
சகோ.இம்மானுவேல் ஸ்டீபன்

செல்வி.கேரன் பெபிட் செல்பின்
சகோதரி.மெர்லின் ஜோன்ஸ்
சகோ. ராஜேஷ் இளங்கோ
சகோதரி.ஜாய்ஷகினா
சகோ. நவின் குமார்
சகோதரி.எப்சிபா பியூலா
சகோதரி.இவ்லின் சுனிதா
சகோதரி.ஜேரன் டேனியேல்
சகோதரர். ஜான்சன்
சகோதரி.ஈவிலின் சுனிதா
சகோதரி.பிரிசில்லா ஆமோஸ்
சகோதரி.சரன்யா சத்தீஷ்
சகோ. ஈஸ்டர் ராஜ்

பிறந்த நாட்கள் மற்றும் திருமண நாட்களை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி.திரு.R. ஜெகநாதன்–
முத்து லெட்சுமி
திருமதி.திரு. பீட்டர் ராமச்சந்திரன்–
தாரணி
திருமதி.திரு.A. ஆரோக்கியதாஸ்–
லில்லி ப்ளோரா
திரு.திருமதி. ராபின் ராஜ்–
ஹெலன் ஷீஜா

திருமதி.திரு. ஜெகன் –
தேவ கிருபை
திருமதி.திரு. அந்தோணி சாமி–
விஜயா
திருமதி.திரு. ராஜவேல் –
ஜகதாம்பாள்
திருமதி.திரு.M.கண்ணன் –
போத்தியம்மாள்

# 2026 – பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/02/2026 | சகோதரி. அல்ஜியா தாமஸ் | சகோதரி. தயா ஏசுரத்தினம் |
| 8/02/2026 | சகோ. கிரன் | சகோ. பிரசாத் |
| 15/02/2026 | சகோதரி. செலின் டேவிட் | சகோதரி. டெய்சி எபினேசர் |
| 22/02/2026 | சகோ. சதீஷ் | சகோ. ஜான்சன் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/02/2026 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. தாமஸ் |
| 13/02/2026 | சகோ. வேலு ராமர் | சகோ. சாம் ஆனந்த் |
| 20/2/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/02/2026 | சகோ.பிராங்க்ளின் | சகோ. ரவிஜான் பீட்டர் |

## ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**
05/2/2026 மாலை 6:00 முதல் 06/2/2025 காலை 6:00 வரை

**12/2/2026 – அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**14/2/2026 – சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி – I & II தெசலோனிக்கேயர்

**27/2/2026 – வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி – சங்கீதம் – 11 முதல் 50 வரை

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!



**கீழக் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் என்றவர் யார்?
2. விசுவாசத்தில் வல்லவன் யார்?
3. அக்கிரமக்காரருக்காக மரித்த ஒரு நீதிமான் யார்?
4. கனம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் என்றவர் யார்?
5. "அப்பா பிதாவே" என ரோமரில் எந்த அதிகாரத்தில் எத்தனையாவது வசனத்தில் உள்ளது ?
6. ரோமாபுரியில் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட ஒரு ஸ்திரீ யார்?
7. உலக பிரசித்தமான விசுவாசத்தை பெற்றிருந்த சபை எது?
8. எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள் என்றவர் யார்?
9. ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று எங்கு வாசிக்கிறோம்?
10 "தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்பு கொடுத்தார்" என வாசிப்பதெங்கே?
11. தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" என வாசிப்ப– தெங்கே?
12. நாம் பிழைத்ததாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம் நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம் என்று வாசிப்பதெங்கே?
13. தீமையை விட்டு விலகி நன்மையை பற்றிகொண்டிருங்கள் என்று வாசிப்பதெங்கே?
14. "சமாதானத்தை கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" என எங்கே வாசிக்கிறோம்?
15. நான் ஜெபம் பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்றவர் யார்?

விடைகளை வருகின்ற 20-02-2026 க்குள்
(WhatsApp #+91 7305651625) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**" ரோமர் நிருபத்தில் "**

இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026 – ஜனவரி மாத வேத வினாவுக்கு விடைகள்

1. கர்த்தருடைய கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் - ( உபா 9:19)
2. கர்த்தரை பகைக்கிறவர்களுக்கு (உபா 7:10)
3. 70 (உபா 10:22)
4. கம்பியை எடுத்து, காதை கதவோடே சேர்த்து (உபா 15: 16,17)
5. துணிகரத்தினால் (உபா 18:22)
6. அம்மோனியன் , மோவாபியன் (உபா 23:3-6)
7. ஆமென் (உபா 27:15-26)
8. இஸ்ரவேலரின் இருதயம் , சந்ததியாரின் இருதயம் (3 உபா 0:6)
9. யேஷுரன் (உபா 32:15)
10. புசிக்கிறதற்கேற்ற கனிகொடாத மரம் (உபா 20:20)
11. தீர்க்கத்தரிசி, சொப்பனக்காரன் (உபா 13:5)
12. குறையற்ற சுமுத்திரையான நிறைகல் , குறையற்ற சுமுத்திரையான படி (உபா 25:15)
13. மோசே (உபா 3:25-27)
14. கர்த்தரைப் பகைக்கிறவர்களைக் குறித்து (உபா 5:9)
15. மனிதன் முகத்திற்கு (உபா 1:17)

## 2026– ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. சுகந்தி
சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. ஜெஸ்லட்
சகோதரி. ஜான்சி ராணி
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சாந்தி
சகோதரி. மரகதம் ஸ்டீபன்

சகோதரி. நிஜா
சகோ. எபிநேசர்
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. அனி சைமன்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. மரிய குளோரி தாஸ்

## வாலிபர் பகுதி

# காலமும் கடமையையும்

எபேசியர் 5 : 16 – நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

ரிங்... ரிங்...ரிங்... என்று மொபைல் அலாரம் அலறியது. காலை ஏழு மணிக்கு எழும்பி கல்லூரிக்கு செல்ல வேண்டியவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். படுக்கையை விட்டு எழும்ப மனதில்லை. மொபைல் அலாரத்தின் அலறல் சத்தம் அவனை தொந்தரவு செய்வதாக நினைத்து அதை அழுத்தி நிறுத்தினான். காலமும் கடமையும் அழைத்தாலும், படுக்கையை விட்டு எழும்பாமல் மேலும் உறங்க ஆரம்பித்தான் அந்த வாலிபன். இவனை போன்றே நம்மில் பலரும், காலம், கடமையை தவறவிட்டு தவிக்கிறோம். மீண்டும் அந்த சந்தர்ப்பம் கிடைக்காதா என்று தவிக்கிற பலர் நம்மில் உண்டு. படுக்கை சோம்பேறித்தனத்தின் அடையாளம். (நீதிமொழிகள்6 : 6 -11) தூங்க வேண்டிய காலம் தூங்கவும், எழும்ப வேண்டிய காலம் எழும்பி கடமையை செய்யவும் வாலிப வயதில் சோம்பேறிதனம் தடை செய்கிறது. வேதத்தில் படுக்கையின் காரணமாக வாலிபர்கள் சிலர் தங்கள் வாழ்வை இழந்த சரித்திரம் உண்டு, அப்படிப்பட்ட ஒரு சிலரைப் பார்போமா.

## 1) யோனாவின் படுக்கை:

தேவனுடைய ஊழியக்காரனாகிய தீர்க்கன் யோனா கப்பலில் படுக்கை விரித்தான். ஆண்டவர் அவனை போகச் சொன்ன திசைக்கு (நினிவே) மாறாக எதிர் திசையில் (தர்ஷீஷ்) பயணிக்கிறான் **(யோனா 1 : 2-5)** கடமை தவறினான், தூங்க கூடாத நேரத்தில் தூங்கினான். **யோனா 1 : 5** கடல் கொந்தளிக்கிறது. அநேகர் உயிருக்கு ஆபத்து நேரிட இருக்கிறது. அதைப் பொருட்படுத்தாமல் அயர்ந்த நித்திரை பண்ணிக் கொண்டிருக்கிறான் ஊழியனான யோனா. அதன் விளைவு

என்ன... யோனா 1:15 கடலுக்குள் தூக்கி எறியப்படுகிறான். ஆண்டவர் செய்யச் சொன்ன கடமையை தவறி காலத்தை மறந்த யோனாவின் நிலை நமக்கு வேண்டாம்.

### 2) சிம்சோனின் படுக்கை:

நியா 13:5,15:20–சிம்சோன் நியாதிபதியாய் அழைக்கப் பெற்றவன். அவனுடைய படுக்கை நியாதி 16:20 தெலீலாளின் மடியாக இருந்தது. சுகபோகமாக தன் கடமையை மறந்து வாழ்ந்தவன் சிம்சோன். விளைவு? நியாயாதி 16:21 கண்களால் பாவம் செய்த சிம்சோனின் கைகள் விலங்கிடப்பட்டது. காலத்தின் கடமையை மறந்து வாழ்ந்தால் விளைவு விபரிதம் என்பதை சிம்சோனின் சரித்திரம் சொல்லுகிறதல்லவா!

### 3) எலியாவின் படுக்கை:

I இராஜா 19:1 வெற்றி வீரனாக வல்லமை பொருந்திய தீர்க்கனாக வாழ்ந்த எலியா. I இராஜா 19:4–5 சோர்வுற்றவனாக சூரைச் செடியின் கீழ் படுக்கை போட்டான். எலியாவுக்கு விரக்தி வந்தது. போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று ஆண்டவரை நோக்கி அபயமிட்டான். ஆண்டவர் விட்டாரா? I இராஜா 19:6,7 இல்லை தேவ தூதரை கொண்டு எழுப்பினார். நீ போக வேண்டிய பிரயாணம் வெகு தூரம், நீ செய்ய வேண்டியவை, சாதிக்க வேண்டியவை இன்னும் ஏராளம் உண்டு என்று தட்டி எழுப்புகிறார்.

அருமையான வாலிபர்களே காலத்தையும் கடமையும் தவறவிட்டு விரக்தியுடன் இருப்பீர்களென்றால் இதுவே நல்ல சமயம். ஓசியா 10:12 அவரைத் தேட காலமாயிருக்கிறது. 2 கொரி 6:2 இப்பொழுதே அநுக்கிரகக்காலம். ரோமர் 2:6 தேவன்

அவனவனுடைய கிரியைகளுக்கு தக்கதாய் அவனவனுக்கு பலனளிப்பாராக.

ஆண்டவரே நான் எனது காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளை செய்து முடிக்க நீரே பெலன் தாரும் என்று கேட்போமா. அவர் நம்மை புதுப்பெலத்தால் இடைக்கட்டி காலத்தையும், கடமையையும் பிரயோஜனப்படுத்தும் கிருபையை தருவார். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளுக்கு செவிக்கொடுத்து அதற்கு அர்ப்பணிக்கிற ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவின் பணியில்**

**ATC Youth Team**

Be an Example : I Timothy 4:12

## "மோட்ச லோகம்"

**சாதி, சமயம் என்றில்லை!**
**எல்லோரும் சமமே!**
**ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வில்லை!**
**யாவருக்கும் கிடைப்பது ஆசீர்வாதமே!**
**உயர்வு, தாழ்வு என்பதில்லையே!**
**சத்துரு (சாத்தான்) பகைவர் போன்றவர்களில்லை!**
**பேதை,ஞானி –வேற்றுமையில்லை!**
**துன்பமோ, வியாதியோ அங்கில்லை!**
**அதிசயமும், ஆச்சரியமும், அற்புதமுமே!**
**பாவங்களும்,பாவிகளும் அங்கு இருப்பதில்லை!**
**இரட்சிக்கப்பட்ட நீதிமான்களின் இருப்பிடமே!**
**பசி, பட்டினி என்பதுவும் அங்கிருப்பதில்லையே!**
**சண்டை,சச்சரவுகளுக்கு இடமேயில்லையே!**
**யாவற்றிற்கும் விட்டுக்கொடுப்பவர்கள் மட்டுமே!**
**பதவி, பட்டம், பேர், புகழ் என்பதுமில்லையே!**
**செல்லும் பாதை –இடுக்கமான ஒரே வாசல் தானே!**
**ஆனால் நிரந்தரமான சமாதானம், சந்தோஷமே!**
**குறை என்று ஏதுவும் அங்கில்லை!**
**அளவில்லா மகிழ்ச்சி! பேரானந்தமே!**
**பரமனைப் போல வாழ்ந்திடு! பரலோகம் நீ சென்றிடு!**

# Kids Corner

**ANSWER'S FOR THE MONTH OF JANUARY**

1. Ahasuerus – Esther 1
2. Vasthi the queen – 1 : 12
3. Held a beauty contest for the young girls of Persia. – 2:24
4. Jewish – 2 : 5-7
5. Assasinate the king – 2:21
6. Mordecai did not bow down to him
7. 13th day of adar. – 3 : 13
8. Put on sackcloth and ashes – 4 : 1
9. 3 days and 3 night. – 4 : 16
10. The golden septure. – 5 : 2
11. Zeresh. – 5:10
12. He read history books. – 6 :1
13. Haman led him on the kings horse. – 6 : 11
14. The king and Haman. – 7 : 1
15. Two. – 5:7
16. He was hanged on the gallows prepared for mordecai. – 7:10
17. He gave the rights to defend themselves
18. Blue and white. – 8:15
19. Ten. – 9:10
20. Purim. – 9 : 26




GYONA



## FEBRUARY MONTH QUIZ FOR CHILDREN



1. The living creature John saw was like what?
2. What musical instrument did the four living creatures and the twenty-four elders sing with?
3. The name of the rider of the pale horse was called what?
4. Who spoke to John about the great multitude?
5. What happened when the angel cast the censor to the earth?
6. In Greek, the name of the king of locusts from the bottomless pit was what?
7. The horses had heads that were like what?
8. When John ate the little book, it tasted ----------------?
9. The feet of the mighty angel looked like what?
10. What is the spiritual name of the city where the two witnesses shall be killed?
11. Who fought against the dragon and his angels?
12. What was given to the woman to make her escape from the devil, the dragon?
13. The beast that came from the sea has how many heads and horns?
14. The second beast had horns like which animal?
15. What is the mark of the beast?

***Kids Find the answer from the Book of***

**REVELATION CHAPTER : 4 - 13**

### CHILDREN'S WHO WROTE THE ANSWERS
### FOR THE MONTH OF JANUARY

Shawn
Fesika
Adriel
Andrea

Rheul
Affia
Vincy
Abel Raj

Name missed in December Month Magazine
Rheual Askinas

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

முதன்மை ஊழியர்

சகோ. ஆரோக்கியதாஸ். P

**99870126**

செயலாளர்

சகோ. தாமஸ்

**66810423**

பொருளாளர்

சகோ. ஜான்சன்

**97610275**

வாலிப
ஐக்கிய தலைவர்

சகோ. கிறிஸ்டோபர்

**67096449**

பெண்கள்
ஐக்கிய தலைவி

**SIS.** டெய்சி எபினேசர்

**60686612**

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால்
அவனைப் பிதாவானவர்
கனம்பண்ணுவார்.

யோவான் **12:26**

**PRIVATE CURCULAR ONLY**